ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2028/55 - 2017 ජූලි මස 21 වැනි සිකුරාදා - 2017.07.21

*2028/55 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டம்**

*32 மற்றும் 33 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

விளையாட்டுக்கள் அமைச்சரான தயாசிறி ஜயசேக்கர ஆகிய நான், 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுத்துறை சட்டமூலத்தின் 32 (ஆ) மற்றும் 33 ஆம் பிரிவுகளின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் குத்துச்சண்டை மற்றும் பிரிட்ஜ் விளையாட்டுக்கள் தொடர்பாக தேசிய சங்கமான/சம்மேளனமான இலங்கை குத்துச்சண்டை சங்கத்தின் அல்லது இலங்கை பிரிட்ஜ் சம்மேளனத்தின் பதிவினை உடன் செயற்படும் வண்ணம் இடைநிறுத்துவதுடன், தற்காலிக பணித்துறையொழுங்காக இலங்கை குத்துச்சண்டை சங்கம் அல்லது இலங்கை பிரிட்ஜ் சம்மேளனத்தின் நடவடிக்கைகளை மேலும் நடாத்திச் செல்லுவதன் பொருட்டு விளையாட்டு அபிவிருத்தித் திணைக்கத்தின் பணிப்பாளர் நாயகமான திரு. சாமசுந்தர ஏக்கநாயக்க ராஜவர்த்தன தென்னகோன் முதியான்சலாகே சமன் பிரியந்த பண்டார அவர்களை 2017.07.20 ஆந் திகதியிலிருந்து உரிய அதிகாரமுடையவராக நியமிப்பதுடன், இலங்கை குத்துச்சண்டை சங்கத்தின் மற்றும் இலங்கை பிரிட்ஜ் சம்மேளனத்தின் 2017 ஆம் ஆண்டு தொடர்பாக புதிய உத்தியோகத்தர் குழுவினை நியமித்துக் கொள்ளுவதன் பொருட்டு உத்தியோகத்தர் தெரிவிற்காக அழைப்பு விடுத்தற்கும் நடாத்துவதற்கும் இத்தால் பணிக்கின்றேன்.

தயாசிறி ஜயசேகர (சட்டத்தரணி) (பா.உ.),
விளையாட்டுக்கள் அமைச்சர்.

கொழும்பு,
2017, யூலை 20.

*8- 234*